வேண்டுமென்று நான் மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். கோயில்களுக்கு, மடங்களுக்குத் தேவையான நிலம் போக உபரியாக இருக்கும் நிலங்களை நிச்சயமாக அந்த நிலத்திலே நேரடியாக உழுது பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு உரிமையாக்கித்தரும் சட்டத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இறுதியாக என்னுடைய, தொகுதியைப் பற்றி சில வார்த்தைகளைப் பின்னால் சந்தர்ப்பம் கிடைக்கும் போது பேசினாலும் இப்போது ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தைத் தனி மாவட்டமாக ஆக்குவதை அங்குள்ளவர்கள் மட்டுமல்ல, எல்லோரும் வரவேற்கிறார்கள். என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்—தஞ்சை மாவட்டமும் மிகப் பெரிய மாவட்டமாக இருக்கிறது. அதை இரண்டாகப் பிரிக்கும் நிலை அதிகச் செலவினத்தைத் தரக் கூடியதாக இருக்கிறது என்றால் தஞ்சை மாவட்டத்தில் அறந்தாங்கி போன்ற பிற்பட்ட பகுதிகளை அமைக்கப்பட இருக்கும் புதுக்கோட்டை மாவட்டத்தில் இணைக்க அரசு ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேருந்துகளைத் தேசிய மயமாக்கி, இது ஒரு சோஷலிச சர்க்கார் என்று நிரூபித்துக் காட்டியது போல் லாரிகளையும் தேசியமயமாக்க வேண்டுமென்று தாழ்மையோடு வேண்டி, வாய்ப்பளித்த நமது மதிப்பிற்குரிய தலைவர் அவர்களுக்கும் மதிப்பிற்குரிய கொறடா அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) பேரவை உறுப்பினர் திரு. சி. வே. வேலப்பன் சேலம் மத்திய சிறைச் சாலையில் காவலில் வைக்கப்பட்டிருப்பது குறித்து

MR. DEPUTY SPEAKER: I have to announce to the House that an intimation has been received from the Superintendent, Central Jail, Salem, that Thiru C. V. Velappan, M.L.A., arrested on 1st March 1973 was remanded for 15 days by the Additional First-Class Magistrate No. 1, Salem, from 1st March 1973 and admitted into the Central Jail, Salem, on the evening of the 1st March 1973.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-36 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.